பக்கங்கள் 15+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 26 திங்கட்கிழமை 09.06.2025 | அதிர்வு 310

## ஜனாதிபதி நாளை ஜேர்மனி பயணம்



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாளை செவ்வாய்க்கிழமை இரவு ஜேர்மனிக்குப் பயணமாகின்றார்.

02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# யாழ். மாநகர சபை மேயர் பதவிக்கு மதிவதனியைப் பரிந்துரைத்த தமிழரசு





## துணை மேயர் பதவிக்குத் தயாளன்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் பதவிக்குத் திருமதி. விவேகானந்தராஜா மதிவதனியை இலங்கைத் தமிழரசுக் கட்சி பரிந்துரைத்துள்ளது.


அதேவேளை, யாழ். மாநகர சபையின் துணை மேயர் பதவிக்கு இம்மானுவேல் தயாளன் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

02

# யாழில் செய்வதுதான் வன்னியில் பதிலாகும்

## ரெலோவுக்குத் தமிழரசு உறைப்பாகத் தெரிவிப்பு









(ந.லோகதயாளன்)

உள்ளூராட்சி சபைகளில் நிர்வாகங்களை அமைப்பது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ரெலோ உட்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி எவ்வாறு நடந்து கொள்கின்றதோ வன்னி தேர்தல் மாவட்டத்தில் அதே பதில் முறைமையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் நடந்து கொள்ளும் என்று தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் ரெலோ தலைவர்களிடம் இன்று உறைப்பாக - உறுதிபடத் தெரிவித்தனர் என அறிய வருகின்றது.

02



## சாவகச்சேரியில் போதைப்பொருள் பயன்படுத்திய பிரபல பாடசாலை மாணவர்கள் மூவர் சிக்கினார்கள்

### விற்பனை செய்த நபரும் கைது

(த.சுபேசன்)

யாழ். தென்மராட்சி, சாவகச்சேரி நகரில் பாடசாலை மாணவர்களுக்கு நீண்ட காலமாகப் போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரை விற்பனையில் ஈடுபட்டு வந்த வர்த்தகர் ஒருவர் இன்று திங்கட்கிழமை சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் .

சாவகச்சேரி நகர் பகுதியில்

02

## அரச மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்

# ரவி குமுதேஷ் பணி இடைநீக்கம்!



அரச மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர் ரவி குமுதேஷ் நிறுவன விதிகளை மீறி கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்டதால் பணியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த இடைநீக்கம் அவர் வேட்பு மனுவில் கையெழுத்திட்ட நாளான 10.10.2024 முதல் அமுலுக்கு வரும் என்றும், இடைநீக்க காலத்தில் அவருக்குச் சம்பளமோ அல்லது கொடுப்பனவுகளோ வழங்கப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்ட ரவி குமுதேஷ், நிறுவன விதிகளை மீறியுள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளதோடு, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் வரை அவர் வெளிநாடு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ஜனாதிபதி...**

ஜேர்மனியால் விடுக்கப்பட்ட அதிகாரபூர்வ அழைப்பையேற்று அங்கு செல்லும் ஜனாதிபதி அநுர, ஜேர்மன் ஜனாதிபதி, வர்த்தக அமைச்சர் உள்ளிட்ட தரப்பினருடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார்.

11 மற்றும் 12 ஆம் திகதிகளில் அங்கு சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இலங்கை மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளுக்கிடையில் இரு தரப்பு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன. ஜேர்மன் முதலீடுகளை இலங்கைக்குப் பெறுவது சம்பந்தமாகவும், ஆடை ஏற்றுமதி பற்றியும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது. வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட குழுவினரும் ஜேர்மன் செல்கின்றனர்.

இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு அமெரிக்காவில் வரி விதிக்கப்பட்டுள்ள நிலையில், ஐரோப்பா சந்தையை இலங்கை இலக்கு வைத்துள்ள நிலையில், ஜனாதிபதியின் இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**சாவகச்சேரியில்...**

பாடசாலை மாணவர்கள் சிலர் போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் கீழ் இயங்கும் போதைப் பொருள் குற்றச் செயல் தடுப்புப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களுக்கு அமைவாக சாவகச்சேரியில் உள்ள பிரபல பாடசாலையின் தரம் 10 மற்றும் 11 மாணவர்கள் மூவர் நேற்று இரவு கைது செய்யப்பட்டு அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை மற்றும் மருத்துவ அறிக்கைகளின் அடிப்படையில் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மரத் தளபாட திருத்த வேலை செய்யும் வர்த்தக நிலையத்தை நடத்தும் 45 வயதான வர்த்தகர் ஒருவரிடம் இருந்து போதை மாத்திரைகள் பெற்றுக்கொள்வது தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் மேற்படி வர்த்தகர் 330 போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவர் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனத் தெரியவந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து அந்த நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தான் ஐஸ் போதைக்கு அடிமையானவர் எனவும், போதை மாத்திரைகளைப் பாடசாலை மாணவர்களுக்கு விற்பதன் மூலம் கிடைக்கும் பணத்தில் ஐஸ் போதைப்பொருளைப் பெற்றுப் பாவித்து வருகின்றார் எனவும் பொலிஸாரிடம் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**யாழில் செய்வதுதான்...**

உள்ளூராட்சி சபைகளில் நிர்வாகங்களை அமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும், அதன் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமியும் இன்று பிற்பகலில் யாழ். நல்லூரில் சி.வி.கே. சிவஞானத்தின் இல்லத்தில் சந்தித்துப் பேசினர்.

வன்னியில் வவுனியா மாநகர சபை மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபைகளில் தங்கள் தரப்பு நிர்வாகத்தை அமைப்பதற்கு ஆதரவு வழங்கும்படி ரெலோ தரப்பினர் இந்தச் சந்திப்பின்போது தமிழரசுக் கட்சியிடம் கோரிக்கை விடுத்தனர் எனத் தெரிகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளின் விடயத்தில் ரெலோ கட்சியும் அது சார்ந்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் எப்படி நடந்து கொள்கின்றனவோ, அதே முறைமையில் வன்னியில் பதில் தரப்படும் எனத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் பதில் பொதுச்செயலாளரும் ஒரே நிலைப்பாடாக உறுதியாக ரெலோ பிரதிநிதிகளிடம் தெரிவித்து விட்டனர் என அறிய வந்தது.

அந்தந்தச் சபைகளில் அதிக இடங்களைப் பெற்ற கட்சி ஆட்சி அமைப்பதற்கு உதவும் முன்னைய பகிரங்க அறிவிப்பை ரெலோவும், அது சார்ந்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் பின்பற்றுமானால் அதே முறைமையைத் தமிழரசும் தவறாது பின்பற்றும்.

அந்த முறைமைக்கு மாறான போக்கை ரெலோ உட்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பின்பற்றுமானால், அதே போல் மாறான முறையைத் தமிழரசுக் கட்சி வன்னியில் பின்பற்றும் என்று தமிழரசின் இரு தலைவர்களும் உறுதிபடத் தெரிவித்தார்கள் என அறியவந்தது.

**யாழ். மாநகர...**

யாழ். நல்லூரில் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனின் இல்லத்தில் இன்று பிற்பகல் நடைபெற்ற கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபைக்கான மேயர், துணை மேயர் தெரிவுகள் எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




### யாழ். தெல்லிப்பழை

# புற்றுநோய் மருத்துவமனையின் இயங்குதிறன் பாதிக்கும் நிலை!

## சிலரின் திட்டமிட்ட கைங்கைரியமே காரணம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

யாழ். தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கு எதிரான திட்டமிட்ட முயற்சிகளால் மருத்துவமனையின் இயங்குதிறன் முற்றாகப் பாதிக்கும் நிலையை நோக்கி நகர்ந்துள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தெல்லிப்பழைக் கிளை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் பொதுமக்கள், தன்னார்வ அமைப்புகள் மற்றும் சில தன்னார்வலர்களின் கடுமையான உழைப்பின் ஊடாக நிறுவப்பட்ட இந்த மருத்துவமனை, இன்றுவரை ஆயிரக்கணக்கான புற்றுநோயாளிகளுக்கு உயிருக்குப் போராடும் வாழ்வதார சிகிச்சையைக் வழங்குகின்றது. ஆயினும் ஆனால், அப்போதும் இப்போதும் தொடர்ந்து சிலர் மேற்கொள்ளும் மறைமுகமான நடவடிக்கைகள், வஞ்சகப் போக்குகள் மற்றும் திட்டமிட்ட இடையூறுகள் இதன் நிரந்தர மேம்பாட்டுக்கும் சேவைக்கும் பெரும் ஆபத்தை ஏற்படுத்தி வருகின்றன.

பல ஆண்டுகளாக புற்றுநோயாளர்களுக்காக அர்ப்பணிப்போடு பணியாற்றி வரும் புற்றுநோய் நிபுணர் மருத்துவர் கிருஷாந்திக்கு எதிராக நடக்கும் அவதூறு பரப்பல், சமூக வலைத்தளங்களினூடான வசைபாடல்கள் மற்றும் தனிப்பட்ட தாக்குதல்களை எமது சங்கம் கடுமையாகக் கண்டிக்கின்றது.

அவரை மனதளவில் பாதித்து, சேவையில் இருந்து பின்வாங்க வைக்கவே இது மேற்கொள்ளப்படுகின்றது என்று எமது சங்கம் தெளிவாக அறிந்து வருகின்றது.

சவாலுக்கு உரிய இந்தச் சூழ்நிலை ஒரு சில தனிநபர்களின் துயரம் மட்டுமல்ல நோயாளர்களின் உயிரிழப்புக்கு வழிவகுக்கும் சமூக மருத்துவப் பின்னடைவுகளுக்கு இடமளிக்கும் நிலையை ஏற்படுத்தும். மருத்துவ நிபுணர்களுக்கு எதிரான இத்தகைய களங்கப்படுத்தல், ஏழை நோயாளர்களின் உரிமைகளை நேரடியாக தாக்குகின்றது.

தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனையின் சேவைகள் குறைக்கப்பட்டு, அதன் தரம் சிதைக்கப்படுவதற்கான பின்னணியில் நிர்வாகச் சீர்கேடுகள், ஊழல் மற்றும் சட்டவிரோத ஒழுங்குகள் செயற்படுகின்றன என்பதையும், அவை உறுதியான தண்டனைவிதிகள் இன்றி தொடர்கின்றன என்பதையும் எமது சங்கம் ஆழ்ந்த கவலையுடன், உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தெல்லிப்பழை கிளை புற்றுநோய் நிபுணர் மருத்துவர் கிருஷாந்தியின் பாதுகாப்பும், பணிச் சுதந்திரமும் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. அவதூறு பரப்பும் நபர்களுக்கு எதிராக உடனடியாக நிர்வாக, சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகின்றது.

தெல்லிப்பழை மருத்துவமனை மற்றும் அதன் அனைத்து பிரிவுகளும் புற்றுநோய் சிகிச்சை பிரிவு உள்ளடங்கலாக பாதுகாக்கப்பட்டு மேம்பட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நோயாளர்களுக்கான உயர்தர சிகிச்சைகள் அரச மருத்துவமனையில் தொடர வேண்டும் என்பதற்காக, எதிர்வரும் நாள்களில் தொழிற்சங்க நடவடிக்கைகள் அவசியமானால் தீவிரப்படுத்தப்படும். நமது நோக்கம் உன்னத நோக்கம் கொண்ட தனிநபர்களைக் காப்பதல்ல நோயாளியின் உரிமைகள், வாழ்க்கை தரம் மற்றும் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே." - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# சிறை ஆணையாளர் பணி இடை நீக்கம்!



சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இன்று கூடிய அமைச்சரவைக் கூட்டத்தின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்ட கைதிகளின் பட்டியலில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு பிறிதொரு கைதி விடுதலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தைப் பணி இடைநீக்கம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.



# வவுனியாவில் 10 கிலோ கஞ்சா மீட்பு!

(கி.வசந்தன்)

வவுனியாவில் வீட்டில் மறைந்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 10 கிலோ கஞ்சாவை மீட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போது வவுனியா, கதிரவேல்பூவரசங்குளம் பகுதியில் உள்ள வீட்டில் இருந்து 10 கிலோ கஞ்சாவைக் கைப்பற்றியுள்ளதுடன், 45 வயதுடைய ஒருவரையும் கைது செய்து ஓமந்தைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை ஓமந்தைப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



# மண்வெட்டியால் தாக்கி மனைவியை படுகொலை செய்த கொடூர கணவன்!

(க.மகாதேவன்)

குளியாப்பிட்டி – வல்பிடகம பிரதேசத்தில் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று குளியாப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் 44 வயதுடைய வடுமுன்னேகெதர பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கணவருடன் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக மண்வெட்டியைக் கொண்டு கணவன் தாக்கியதில் மேற்படி பெண் மரணித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் குளியாப்பிட்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கொலையாளியான மேற்படி பெண்ணின் கணவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் குளியாப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பெருச்சாளிகள் சிக்குமா?

முன்னைய அரசுகளின் காலத்தில் இடம்பெற்ற ஊழல், முறைகேடுகள், மோசடிகள், தவறான நிதிக் கையாள்கள், நிர்வாகச் சீர்கேடுகள் ஆகியவை தொடர்பில் கிடுக்கிப்பிடியை இறுக்கிப் பிடிக்க தேசிய மக்கள் சக்தி அரசு தீர்மானித்து இருப்பதாகத் தெரிகிறது.

தோண்டத் தோண்டப் புதையல் வருவது போல, முன்னைய ஆட்சி காலங்களின் கோவைகளை நோண்ட நோண்ட, புதுப்புது ஊழல்கள் பற்றிய தகவல்கள் வெளி வருகின்றன என்று கூறப்படுகின்றது.

இவற்றை விசாரித்து, புலனாய்வு செய்து, உண்மைகளைக் கண்டறிந்து, குற்றம் புரிந்தோரை சட்டத்தின் முன் நிறுத்தி, பொறுப்புக் கூறலை நிலை நாட்டுவதற்குப் மேலதிகமாகப் புலனாய்வாளர்கள், விசாரணையாளர்கள், சட்டத்துறையினர் அரசுக்கு தேவைப்படுகின்றனர் என்பது புரிந்து கொள்ள தக்கதே.

அந்த அடிப்படையில், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக் குழுவுக்கு மூத்த பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (எஸ்.எஸ்.பி.) மோகன் லால் சிறிவர்தன, லஞ்ச ஒழிப்பு ஆணையத்தில் புலனாய்வு இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் முன்னர் குற்றப் புலனாய்வுத் துறையின் (சி.ஐ.டி.) நிதிக் குற்றப் பிரிவின் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகப் பணியாற்றியவர்.

கூடுதலாக, பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.கே.பண்டார, அம்பாறை பிரிவிலிருந்து குற்றப் புலனாய்வுத் துறைக்கும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.ரி. அனுரங்க, மவுண்ட்லவேனியா பிரிவிலிருந்து குற்றப் புலனாய்வுத் துறைக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

முன்னைய ஆட்சி காலங்களில் சர்வ சாதாரணமாக - எந்தவித கூச்சநாச்சமும் இன்றி - ஊழல்களில், முறைகேடுகளில், ஈடுபட்ட அரசியல்வாதிகள் இனிமேல் நெருக்கடிகளை எதிர்கொள்ளப் போகின்றார்கள் என்பது திண்ணம். இதை எவ்வளவு தூரம் புதிய ஆட்சியாளர்கள் வெற்றியாகக் கொண்டு செல்வார்கள் என்பது கேள்விக் குறிதான்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பு திட்டத்தின் கீழான நடவடிக்கைகளிலேயே 'வெகு ஸிம்பிளாக' மோசடிகளைச் செய்கின்ற அதிகாரிகளை கொண்டிருக்கும் இலங்கையின் அரச கட்டமைப்பு, அதன் முன்னைய ஊழல், மோசடி நடவடிக்கைகளை எவ்வளவு தூரம் வெற்றியாகக் களையும், அவற்றில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் என்பது கேள்விக்குறிதான்.

"இலங்கையில் எதிர்பார்க்க முடியாத அளவுக்கு இலஞ்ச, ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. கொள்கைத் திட்ட வகுப்பின் ஊடாகவே பெருமளவிலான ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. முறையற்ற வகையில் அமைச்சரவைப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு, அவற்றின் ஊடாகவே அரச நிதி மோசடி செய்யும் அல்லது வீண் விரயம் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன" - என்று லஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸநாயக்க அதிர்ச்சித் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அரச மேல்மட்டத்தில் கட்டவிழ்ந்த ஊழல், மோசடிகளைக் கண்டுபிடித்து, அம்பலப்படுத்தி, குற்றமிழைத்தோருக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பது என்பது இலகுவாக சாத்தியப்படக் கூடிய விடயமல்ல.

# மன்னாரில் மாணவர்களுக்கு சுற்றுச் சூழல் விழிப்புணர்வு





( வாஸ் கூஞ்ஞ)

உலக சுற்றாடல் சூழல் தினத்தை முன்னிட்டு மன்னாரில் இரு தினங்கள் மாணவர்கள் மத்தியில் சுற்றுச் சூழல் தொடர்பான கருத்தமர்வுகள் இடம் பெற்றன.

வியாழக்கிழமை பள்ளிமுனை புனித லூசியா மகா வித்தியாலத்தில் 150 பிள்ளைகளுக்கும் புனித சவேரியார் பெண்கள் பாடசாலையில் 1700 பெண் பிள்ளைகளுக்கும் மன்னார் சித்திவிநாயகர் இந்து கல்லூரியில் 300 மாணவர்களுக்கும் சுற்று சூழல் சம்பந்தமான விழிப்புணர்வு கருத்தரங்கு நிகழ்வுகள் இடம்பெற்றன.

மன்னார் மாவட்ட துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் யூஎன்டிபி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்நிகழ்வுகளை நடத்தியது.

இந்தக் கருத்தரங்கில் குறிப்பாக பொலீத்தீன் பாவனை, காடு அழிப்பு , காபனீரொக்சைட்டால் ஏற்படும் பாதிப்புகள், சிக்குன்னியா, மலேரியா போன்ற அவதானிப்புக்கள், சுற்றுச் சூழல் சுகாதாரம் போன்ற பல விடயங்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்துரையாடப்பட்டன.







# வெள்ளக் காடாகக் காட்சிதரும் கதிர்காமம் காட்டு வழிப்பாதை!

( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழாவுக்காகக் காட்டு வழிப்பாதை இன்னும் 12 தினங்களில் அதாவது எதிர்வரும் 20 ஆம் திகதி திறக்கப்படும்.

வருடாந்தம் சுமார் 40 ஆயிரம் அடியார்கள் இப் பாதையில் பயணிப்பதுண்டு.

எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 5.30 மணியளவில் உகந்தமலை குமண சரணாலய நுழைவாயிலில் காட்டுப் பாதை திறக்கப்படும்.

காட்டுப் பாதை திறப்பதற்கு இன்னும் 12 தினங்கள் இருக்கும் நிலையில் அந்தப் பாதை எங்கும் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கிறது.

தொண்டு நிறுவனங்கள் அப் பாதையின் இன்றைய நிலை பற்றி அறிவித்துள்ளன.

கதிர்காமப் பாதயாத்திரீகர்கள் தங்கும் முதலாவது இடைத்தங்கல் பிரதேசமான வாகூர வெட்டை (வண்ணாத்தி வெட்டை) பகுதியில், கடந்த நாள்களில் பெய்த மழை காரணமாக, பெரும்பாலான இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்கின்றன.

வழக்கமாக முதலில் வாகுரவெட்டையில் கடக்கும் வெட்டையை கடந்த பின் பாதயாத்திரீகர்கள் சிரமமின்றி தங்கள் இடைத்தங்கல் பிரதேசங்களை அடைவர். ஆனால் இம்முறை, அப்பகுதி முழுவதும் வெள்ளம் நிறைந்து, நடந்து செல்லவே முடியாத அளவுக்கு காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது .

இந்த நிலையில், இம்முறை பாதயாத்திரீகர்கள் வன இலாகா வாகனங்கள் செல்லும் பாதையினூடாகவே செல்லும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாது பாதயாத்திரீகர்கள் இரவில் தங்குவதற்கான இடவசதி பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது. இரவில் உறங்கும் இடமெல்லாம் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

மேலும் குமுக்கன் ஆற்றின் ஓட்டமும் கடந்த வாரங்களில் கணிசமாக அதிகரித்து காணப்படுகின்றது. ஆனால் தற்போது முகத்துவாரம் ஊடாக நீர் வழிந்து ஓடுவதாகவும் சில நாட்களில் நீர் ஓட்டமும் குறையக்கூடிய வாய்ப்பும் இருப்பதாக அறியக்கூடியதாக உள்ளது.

இதேவேளையில் வனவிலங்குகளின் நடமாட்டமும் அதிகரித்துள்ளது. முக்கியமாக சிறுத்தைகளின் பெருக்கமும் நடமாட்டமும் அதிகமாக காணப்படுகின்றமை முக்கியமாகக் கவனிக்கக் கூடிய ஒன்றாகக் காணப்படுகின்றது.

ஆனால் இவை மனித நடமாட்டத்துக்கு இசைவாக்கம் அடைந்துள்ளன என்று வன விலங்கு அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலைகளில், பாதயாத்திரையில் கலந்து கொள்பவர்கள் விழிப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முன்பள்ளி மற்றும் அறநெறிக் கல்வி சமூக முன்னேற்றத்துக்கு அவசியம்

## கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் காப்பாளர் ந.சச்சிதானந்தன்

(த.சுபேசன்)

சமூக முன்னேற்றத்துக்கு முன்பள்ளி மற்றும் அறநெறிக்கல்வி அவசியம் என்று இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் காப்பாளர் ந.சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சமூக முன்னேற்றத்துக்குக் கல்வியே அடிப்படையாகும். அதற்கு முன்பள்ளிக் கல்வியும் அறநெறிக் கல்வியும் முக்கியமானவை. முன்பள்ளிக் கல்வி ஊடாகவே எதிர்காலக் கல்வியை சிறப்பான நிலைக்கு எடுத்துச்செல்ல முடியும்.



முன்பள்ளி ஆசிரியர்களுடைய சம்பளத்தை அதிகரிக்க முன்னராக அவர்களுடைய கல்வித் தரத்தை அதிகரிக்க கல்வி அபிவிருத்திக் குழுமம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்தவகையில் கல்வி அபிவிருத்திக் குழுமமானது வடக்கு,கிழக்கு மாகாணங்களில் முன்பள்ளி ஆசிரியர்கள் டிப்ளோமா கற்கையை கற்பதற்கான பண உதவியை வழங்கி வருகின்றது.

அதேநேரம் மலையகத்திலும் முன்பள்ளி ஆசிரியர்கள் என்.வி.கியூ. 4, மற்றும் என்.வி.கியூ 5 கற்பதற்கான பண உதவிகளை இலங்கை மற்றும் லண்டன் கிளை கல்வி அபிவிருத்திக் குழுமம் வழங்கும்.– என்றார்.





# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த அருளுரையும் உதவிகளும்





சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக, ஆன்மீக அருளுரையாக, “வாழ்வும் வழிபாடும்” என்ற அருளுரையை யாழ்ப்பாணம் – பல்கலைக்கழகம் இந்துநாகரிகத்துறை மாணவன் க.பிரணவன் நிகழ்த்தினார்கள்.

நிகழ்வில் உதவித் திட்டமாக, கோப்பாய் தெற்கு , அத்தித் தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, ஆலய புனருத்தாரணப் பணிக்காக பரிபாலன சபையிடம் 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை இந்த நிகழ்வு இடம்பெற்றது.





# மன்னார் நகர் பாடசாலைகளின் சுகாதாரம் தொடர்பில் நடவடிக்கை

(மன்னார் நிருபர்)

மன்னார் நகர் பகுதியில் உள்ள பாடசாலைகள் தொடர்பாக மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு கிடைக்கப்பெற்ற எழுத்து மூல முறைப்படுகளைத் தொடர்ந்து மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி ரூபன் லெம்பேட் ஆலோசனையின் பெயரில் தலைமை பொது சுகாதார பரிசோதகரின் தலைமையில் இன்று (9) இடம்பெற்ற ஆய்வு நடவடிக்கையின் போது பாடசாலை ஒன்றில் காணப்பட்ட பல்வேறு சுகாதார குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளது.

மாணவ, மாணவிகள் பயன்படுத்தும் மலசல கூடங்கள் உரிய முறையில் சுத்தம் பேணப்படாமை, பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படும் மலசல கூடங்கள், சுகாதாரமற்ற முறையில் சிற்றுண்டி சாலையில் கையாளப்படும் உணவு பொருள்கள், மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச உணவு தயாரிக்கும் பகுதி பொருத்தமான முறையில் பராமரிக்கப்படாமை, சுத்தமின்றி காணப்படுகின்றமை, கழிவுநீர் வெளியேறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமை, டெங்கு நுளம்பு பரவும்வகையில்சுற்றுச்சூழல்காணப்படுகின்றமை, ஆசிரியர் விடுதி துப்பரவின்மை, பாடசாலை வளாகத்தில் கழுதை, நாய் போன்ற மிருக நடமாட்டம், பொலித்தீன் மற்றும் ஏனைய குப்பைகள் ஒழுங்கான முறையில் அகற்றப்படாமை போன்ற பல்வேறு சுகாதார குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

அதேநேரம் பாடசாலை சூழலில் மாணவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய வகையிலான பொருள்கள், உலோகங்கள், கட்டடங்கள், மணல் திட்டுகள் என்பன அடையாளப்படுத்தப்பட்ட நிலையில் அவற்றையும் அகற்றுவதற்கான பணிப்புறை மன்னார் பொது சுகாதார அதிகாரிகளால் பாடசாலை நிர்வாகதினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதே நேரம் மாணவர்களுக்கு உணவு தயாரிக்கும் பகுதி புனர் நிர்மாணம் செய்யப்படும்வரை பொது சுகாதார அதிகாரிகளால் மூடி வைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் தொடர்ச்சியாக பாடசாலைகளின் சுகாதார குறைபாடுகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் நிலையில் மன்னாரில் உள்ள பாடசாலைகளில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்சியாக மன்னார் பொது வைத்திய அதிகாரிகள் பணிமனையால் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.











# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வரணி பாடசாலைக்கு 3,15000 ரூபா செலவில் குடிதண்ணீர் திட்டம்!

யாழ்ப்பாணம், வரணி, கரம்பைக் குறிச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக, 78 மாணவர்கள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலையில் ஏற்பட்டுள்ள குடி தண்ணீர் தட்டுப்பாட்டைச் சீர்செய்வதற்காக, சந்நிதியான் ஆச்சிரமத்தின் 3 லட்சத்து 15 ஆயிரம் ரூபா நிதிப் பங்களிப்பில் குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் கையளிக்கப்பட்டது.

இன்று திங்கள்கிழமை காலை இடம்பெற்ற நிகழ்வில், பாடசாலை முதல்வர் என். கண்ணதாசன் தலைமையில் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளால் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலை பழைய மாணவர் சங்க நிர்வாகத்தினர், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆச்சிரம தொண்டர்கள் பங்கு கொண்டனர்.



# திருக்கோவில் ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பான கலந்தாய்வு!

( வி.ரி.சகாதேவராஜா)



திருக்கோவில் ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாக வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி ஷஹிலா இஸ்ஸதீனை சந்தித்து பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலே நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதன்போது திருக்கோவில் வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பாகவும் அபிவிருத்தி தொடர்பாகவும் அபிவிருத்தி குழுவினர் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

தற்போது திறப்பதற்கு தயார் நிலையில் உள்ள வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை கூடத்தை திறந்து வைப்பது தொடர்பாகவும் பேசப்பட்டது.

அதேவேளை, இயன் மருத்துவப் பிரிவு திறக்கின்ற தினம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

பசற்சிகிச்சை பிரிவானது தொடர்ந்து நீண்ட காலமாக வைத்தியர் வராமையினால் மூடிக் கிடப்பதனையும் மற்றும் அபிவிருத்தி வேலைகள் தொடர்பான விடயங்களையும் இந்தக் கலந்துரையாடலின் போது பேசப்பட்டது.

குறிப்பாக அண்மையில் வழங்கப்பட்ட தாதிய நியமனத்தில் தமது வைத்தியசாலைக்கு ஒருவர் கூட நியமிக்கப்படவில்லை, இருப்பினும் சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிபுரையின் பேரிலே மூன்று தாதிய உத்தியோகத்தர்கள் திருக்கோவில் வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எனினும் அவர்களைத் திருக்கோவில் வைத்தியசாலையில் தொடர்ந்து பணியாற்ற நியமிக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக் கொண்டனர் .

அதற்கு அமைவாகசெய்து தருவதாக அவர் உறுதியளித்தார். சந்திப்பு திருப்தி அளித்ததாக அபிவிருத்தி குழு உறுப்பினர் கண். இராஜரெத்தினம் தெரிவித்தார்.

# ஆஸ்திரேலிய இலங்கை மாணவர் கல்வி நிதியம் அம்பாறை மாவட்ட மாணவர்களுக்கு உதவிகள்



இலங்கையில் முன்னர் நீடித்த போரால் பாதிக்கப்பட்ட மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு கடந்த 36 வருடங்களாக உதவி வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான, ஆஸ்திரேலிய இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் அனுசரணையில் இந்த வாரம் அம்பாறை மாவட்ட மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு கல்வி நிதியத்தின் அம்பாறை மாவட்ட தொடர்பாளர் அமைப்பான பாண்டிருப்பு மாணவர் கல்வி அபிவிருத்தி நிறுவகத்தின் ஏற்பாட்டில் அதன் அலுவலகத்தில் ஓய்வு நிலை அதிபர் தலைவர் ந. கமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உதவி பெறும் மாணவர்களும் அவர்களின் பெற்றோரும் நிறுவகத்தின் செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

ஆஸ்திரேலியாவில் இருந்து கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தில் இணைந்துள்ள அன்பர்களின் ஆதரவால், இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

பாண்டிருப்பில் நடந்த இந்த நிகழ்வில் மாணவர் கல்வி அபிவிருத்தி நிறுவகத்தின் பொருளாளர் வே. நகுலேஸ்வரன், செயற்குழு உறுப்பினர்களான செல்வி ஞா. தர்மிகா, திருமதி க.தக்ஷா, திருவாளர்கள் யனார்த்தன், தி. ஜெயகிருஷ்ணா ஆகியோர் நிதியுதவிகளை வழங்கினர்.

தமது பிரதேச மாணவர்களின் கல்வி விருத்தியில் அக்கறை கொண்டு தொடர்ந்து உதவி வரும் ஆஸ்திரேலிய இலங்கை மாணவர் கல்வி நிதியத்துக்கும் அதன் நிர்வாகிகளுக்கும் பாண்டிருப்பு மாணவர் கல்வி அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவர் ந.கமலநாதன் நிகழ்ச்சியின் இறுதியில் நன்றி தெரிவித்தார்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைகாசிப் பெருவிழாவும், ஞானச்சுடர் கட்டுரையாளர்களுக்கான கௌரவிப்பும்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் வருடாந்தம் இடம்பெறும் வைகாசிப் பெருவிழா மாதாந்தம் இடம்பெறும் திருவாசக முற்றோதலுடன், ஞானச்சுடர் கட்டுரையாளர்களுக் கான கௌரவிப்பு நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளன.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரமப் பொறுப்பாளர் சாதனைத் தமிழன் அமுதகலாசுரபி செ. மோகன தாஸ் சுவாமிகள். தலைமையில் இந் நிகழ்வுகள் நடைபெறவுள்ளது

இந்த நிகழ்வுகளுடன் விசேட நிகழ்வாக, நா.நவராஜின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும்

2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டுவரை வெளி வந்த ஞானச்சுடர் மலரில் இடம்பெற்ற ஆக்கங்களை எழுதிய கட்டுரையா ளர்கள் அனைவரும் இந்த நிகழ் வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.





# சீர்கேட்டுடன் காணப்படுகிறது சிலாபம் பொது மீன் சந்தை!

**(உடப்பு க.மகாதேவன்)**

சிலாபம் நகர சபைக்கு உட்பட்ட பொது மீன் சந்தை பல வகைகளில் திருத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளது என்று சிலாபம் மீனவர்களும், பொது மக்களும் கருத்துக்களை முன் வைத்துள்ளனர்.

சிலாபம் மீன் சந்தையில் பல வகையான குறைபாடுகளை அங்கே காணக் கூடியதாக உள்ளது.

முக்கியமாக பொது மக்கள் மீன்களை கொள்வனவு செய்யும் போது, வயதான ஒரு அம்மையார் தரையில் வழுக்கி விழுந்த சந்தர்ப்பத்தையும் காணக் கூடியதாக இருந்தது.

கட்டடத்தின் மேல் கூரை பல பகுதிகளில் உடைந்த நிலையில் விழும் தருவாயில் காணப்படுகின்றன.

இது நீண்ட நாள்களாக திருத்தப்படவில்லை. இதனை நிவர்த்தி செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அதே நேரம் மீனின் கழிவுகளையும் ஒழுங்காக அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.





# மெய்தி இன முக்கிய தலைவர் கைது எதிரொலி: மணிப்பூரில் கலவரம்; இணைய சேவை துண்டிப்பு




மணிப்பூரில் முக்கிய மெய்தி இனத் தலைவர் கைது செய்யப்பட்டார் என வெளியான தகவலையடுத்து போராட்டக்காரர்கள் தலையில் பெட்ரோலை ஊற்றிக்கொண்டு தீக் குளிக்கப்போவதாக மிரட்டல் விடுத்துள்ளனர்.

மணிப்பூரில் அரம்பாய் தெங்கோல் (ஏடி) என்ற மெய்தி அமைப்பின் தலைவர் கனன் சிங் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டார்.

கூடுதல் பொலிஸ் கண்காணிப்பாளர் மொய்ராங்தெம் அமித்தின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் அதைத் தொடர்ந்து பெப்ரவரி 2024 இல் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் கடத்தப்பட்ட சம்பவங்களில் கனன் சிங் சந்தேகத்துக்குரிய முக்கிய நபராக உள்ளார். இவர், மாநில பொலிஸின் கொமாண்டோ பிரிவில் தலைமைப் பொலிஸில் பணியாற்றியவர். கடமையை செய்ய தவறியதற்காக இவர் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார்.

மெய்தி இனக்குழுவின் முக்கிய தலைவராக கருதப்படும் கனன் சிங் கைது செய்யப்பட்ட தகவல் வெளியானதைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கருப்பு நிற உடை அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் கைகளில் வைத்திருந்த பெட்ரோலை தலையில் ஊற்றிக் கொண்டு தீக்குளிக்கப் போவதாக மிரட்டல் விடுத்தனர். இதனால், பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இதுதொடர்பில் போராட்டக்காரர் ஒருவர் கூறுகையில், “ அரசு கோரிக்கையின்படி நாங்கள் ஆயுதங்களை திரும்ப வழங்கினோம். வெள்ளத்தின் போது நீங்கள் செய்ய வேண்டிய நிவாரணப் பணிகளை நாங்கள் செய்தோம். இப்போது, நீங்கள் எங்களையே கைது செய்கிறீர்களா?. நாங்கள் தற்கொலை செய்து கொள்வேம்” என்று தெரிவித்தார்..

முன்னதாக அரம்பாய் தெங்கோல் அமைப்பின் தலைவர் கனல் சிங்கின் கைதைகண்டித்துபோராட்டக்காரர்கள் சனிக்கிழமை இரவு டயர்களை எரித்து சாலை மறியலில் ஈடுபட்டனர். இம்பாலின் பல பகுதிகளில் துப்பாக்கிசூடு சத்தம் கேட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மணிப்பூரில் வன்முறை மேலும் பரவாமல் இருப்பதற்காக, 5 நாள்களுக்கு இணைய சேவையை துண்டிக்க ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து, பிஷ்ணுபூர், இம்பால் மேற்கு, இம்பால் கிழக்கு, தௌபல் மற்றும் காக்சிங் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஐந்து நாட்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இணைய சேவையும் துண்டிக்கப்பட்டுள்ளது. கலவரத்தை கட்டுப்படுத்த பாதுகாப்பு படையினர் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ளனர்.

# பா.ஜ.கவின் அரசியல் தமிழகத்தில் எடுபடாது

## திருமாவளவன் கருத்து



தமிழகத்தில் பா.ஜ.க. முருகன் அவதாரத்தை எடுத்துள்ளது எனவும் இதற்கு மக்கள் ஏமாறமாட்டார்கள், முருகனும் ஏமாறமாட்டார் என்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கருத்து தெரிவிக்கையில்,

“வக்பு திருத்த சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தி வி.சி.க. சார்பில் திருச்சியில் வரும் 14 ஆம் திகதி பேரணி நடைபெறவுள்ளது. ஜனநாயகத்தைக் காப்பவர்களும், மதச் சார்பின்மையைப் பாதுகாப்பவர்களும் இந்தப் பேரணியில் பங்கேற்க வேண்டும்.

பா.ஜ.க. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு வடிவம் எடுத்து வருகிறது. உத்தர பிரதேசம் போன்ற மாநிலங்களில் ராமர் வடிவம், மேற்கு வங்கத்தில் துர்கா தேவி, மத்திய இந்தியாவில் விநாயகர், தமிழகத்தில் முருகன் அவதாரத்தை எடுத்துள்ளது. வட மாநிலங்களில் பா.ஜ.க. செய்யும் இதுபோன்ற அரசியல் தமிழகத்தில் எடுபடாது. முருகன் பெயரில் மாநாடு நடத்துவதும் இங்கு எடுபடாது. தமிழ் மக்களும் ஏமாறமாட்டார்கள், தமிழ் கடவுள் முருகனும் ஏமாறமாட்டார்.

வட மாநிலங்களில் நடைபெறும் தேர்தல் `மேட்ச் பிக்ஸிங்’ போல உள்ளது என்று ராகுல் காந்தி கூறியிருப்பது உண்மைதான். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தை வைத்து பா.ஜ.க. சூதாட்டம் நடத்தி வருகிறது. அனைவரும் இந்த மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்துக்கு எதிராகப் போராடும் நிலை உருவாக வேண்டும். 2026 தேர்தலில் அதிமுகவின் வாக்கு வங்கி சரிந்துவிடும். பா.ஜ.க. அவர்களுக்கு பலம் உள்ளது போன்று காட்டிக்கொள்வர்.

தமிழகத்தில் திமுகவுக்கு மாற்றாக எதிர்க்கட்சிகளின் கூட்டணி உருவாகவில்லை. அமித்ஷா தமிழகத்துக்கு அடுத்தடுத்து வந்து கூட்டணியை உருவாக்க முயற்சிக்கிறார். இப்போதைக்கு அ.தி.மு.க. மட்டுமே பா.ஜ.க. வலையில் சிக்கி உள்ளது. மற்ற கட்சிகள் உடன்படவில்லை. தமிழகத்தில் வெற்றி பெறும் வலுவான கூட்டணியாக தி.மு.க. கூட்டணி உள்ளது.

எங்களது நிலைப்பாடு கூட்டணி ஆட்சி என்பதுதான். அதற்கான சூழ்நிலை தற்போது தமிழகத்தில் ஏற்படவில்லை. அதற்காக, கூட்டணி ஆட்சி நிலைப்பாட்டை நாங்கள் கைவிடவும் இல்லை. நடைமுறைக்கு சாத்தியம் இல்லாத நிலையில் கூட்டணி ஆட்சி குறித்து வலியுறுத்த மாட்டோம்.” என்றார்.






# தாய்லாந்து பணயக் கைதி உடல் மீட்பு: இஸ்ரேல் தாக்குதலில் 95 பேர் உயிரிழப்பு

காசாவில் தாய்லாந்து பணயக் கைதி ஒருவரை இஸ்ரேல் நேற்று மீட்டது. காசாவில் தொடரும் விமான தாக்குதலில் நேற்று 95 பாலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்.

இஸ்ரேலில் கடந்த 2023 ஆம் ஆண்டு தாக்குதல் நடத்திய ஹமாஸ் தீவிரவாதிகள் 251 பேரை பணயக் கைதிகளாக காசாவுக்கு கொண்டு சென்றனர். இதனால் இரு தரப்பினர் இடையே ஏற்பட்ட போரில் இஸ்ரேல் தரப்பில் 1,200 பேரும், பாலஸ்தீனர்கள் 54,000 பேரும் உயிரிழந்தனர்.

இன்னும் 55 பணயக் கைதிகள் பற்றிய தகவலை தெரிவிக்காமல் ஹமாஸ் உள்ளது. இவர்களில் பாதி பேர் உயிரோடு இருக்க வாய்ப்பில்லை என இஸ்ரேல் நம்புகிறது. எஞ்சியுள்ள பணயக் கைதிகளை மீட்கும் முயற்சியில் இஸ்ரேல் தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது.

பணயக் கைதிகளை வைத்திருக்கும் முஜாகிதீன் படை என்ற பிரிவின் தலைவர் அஸ் அத் அபி ஷரையா என்பவரை இஸ்ரேல் இராணுவம் காசாவில் சமீபத்தில் சுட்டுக் கொன்றது. காசாவின் ர:ஃபா நகரில் முஜாகிதீன் படை பிரிவினருடன் நடைபெற்ற சண்டையில், ஒரு பணயக் கைதியின் உடலை இஸ்ரேல் இராணுவம் நேற்று மீட்டது. அவர் நட்டாபாங் பின்டா என்பது தெரியவந்துள்ளது. இவர் விவசாய பணிக்காக இஸ்ரேல் சென்றிருந்தார். பணயக் கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்ட வெளிநாட்டினரில் தாய்லாந்தைச் சேர்ந்தவர்கள் அதிகம். இவர்களில் 46 பேர் இதுவரை இறந்துள்ளனர். காசாவில் இஸ்ரேல் நேற்று நடத் திய விமான தாக்குதலில் பாலஸ்தீ னர்கள் 95 பேர் இறந்ததாக காசா சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.







# நாடுகடத்துதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து லொஸ் ஏஞ்சலிஸில் தொடரும் போராட்டம்

லொஸ் ஏஞ்சலிஸ் நகரில் 3 ஆவது நாளாக இன்றும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அமெரிக்காவில் உரிய ஆவணங்களின்றி சட்டவிரோதமாகக் குடியேறியவர்களை கண்டறிந்து நாடுகடத்தும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் லொஸ் ஏஞ்சலிஸ் பகுதியில் கடந்த இரண்டு நாள்களாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், தேசியப் பாதுகாப்பு பிரிவினர் போராட்டங்களை தடுப்பதற்காக கண்ணீர் புகை பிரயோகங்களை மேற்கொண்டுவருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரின் 101 முக்கிய நெடுஞ்சாலைகளை முற்றுகையிட்டு வரும் ஆர்ப்பாட்டக்காரர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, கலிபோர்னியாவின் ஆளுநர், துருப்புக்களின் அனுப்புதலை ரத்து செய்யுமாறு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை வலியுறுத்தியுள்ளார்.

# செவ்வாய்க் கிரக ஆய்வுகளில் முன்னேற்றம் அடைந்தது சீனா

செவ்வாய்க் கிரகத்தில் மின் உற்பத்தி செய்தல், அதனை சேமித்தல் ஆகிய ஆய்வுகளில் சீனா முன்னேற்றம் அடைந்துள்ளது.

செவ்வாய்க் கிரகத்தில் மின் சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய எரிசக்தி மூலத்தை சீன விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.



இதன்மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதிலும் சேமிப்பதிலும் சீன விஞ்ஞானிகள் குழு முன்னேற்றம் அடைந்துள்ளது.

செவ்வாய்க் கிரகத்தின் வளிமண்டல வளர்ச்சி மற்றும் பயன்பாடு என்பவற்றில் விஞ்ஞானிகள் தீர்க்கமான படியை எடுத்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனடா முரசு

திங்கட்கிழமை 09/06/2025

## வாகனத்தை திருடி சென்ற சிறுவர்கள் நால்வர் கைது

வாகனமொன்றை திருடிச் சென்ற 4 சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருடப்பட்ட ஒரு எஸ்.யு.வி. வாகனத்துடன் தப்பிச் சென்ற நான்கு குற்றவாளிகள் 02






# கரி ஆனந்தசங்கரியை பாராட்டினார் பிரதமர்

**கனடாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் கரி ஆனந்தசங்கரியை பிரதமர் மார்க் கார்னி புகழ்ந்து பாராட்டியுள்ளார். ஊடகவியலாளர் ஒருவர் கரி ஆனந்தசங்கரி தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது பிரதமர் இவ்வாறு பாராட்டியுள்ளார்.**

**கனடாவின் புதிய பாதுகாப்பு அமைச்சர் கெரி ஆனந்த சங்கரி மிகவும் நேர்மையானவர் எனவும் தனது கடமையை சிறந்த முறையில் மேற்கொள்பவர் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.**

கரி ஆனந்தசங்கரி தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் எவ்வாறு நேர்மை தன்மையுடன் நடந்து கொள்வார் என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

குறிப்பாக கரி ஆனந்த சங்கரி தமிழீழ விடுதலை புலிகளுக்கு ஆதரவான வகையில் செயற்பட்டு வருகின்றார் என குற்றம் சுமத்தி இந்த கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

இதன் போது கரி ஆனந்த சங்கரி மிகவும் நேர்மையான முறையில் தனது பதவியின் கடமைகளை செய்து வருகின்றார் எனவும் எந்த இடத்தில் எதனை செய்ய வேண்டும் என்பதில் மிகுந்த தெளிவுடன் செயல்பட்டு வருகின்றார் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

எனவே தேசிய பாதுகாப்பு விவகாரத்தில் எந்த ஒரு பிரச்சனையும் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கரி ஆனந்தங்கரி நீதி அமைச்சராகவும் நாட்டின் சட்ட மா அதிபராகவும் கடமையாற்றிவர் எனவும் எனவே அவரது பதவி தொடர்பில் தெளிவுடன் செயற்பட்டு வருகின்றார் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

# டொரொண்டோ மேற்கில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் பலி

டொரொண்டோ மேற்குப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

எமெட் அவென்யூ மற்றும் ஜேன் சட்ரீட் அருகே துப்பாக்கிச் சத்தங்கள் கேட்கப்பட்டதாக பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் காயமடைந்த நபர் ஒருவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்தில் இருந்து சந்தேக நபர் ஒருவர் பொலிஸார் வருவதற்கு முன்பே தப்பிச் சென்றுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.




இந்த கொலை தொடர்பாக தற்போது டொரொண்டோ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சந்தேக நபர் தொடர்பான விவரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. சம்பவம் குறித்த தகவல்கள் உள்ளவர்கள் பொலிஸாரிடம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.




# பிளஃபர் பூங்காவில் கத்திக்குத்து; இருவர் வைத்தியசாலையில் அனுமதி

கனடாவின் பிளஃபர் பூங்காவில் நடந்த கத்திக்குத்து தாக்குதல் சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டொராண்டோ, ஸ்காரப்ரோவில் கிழக்கு முனையில் உள்ள பூங்காவில் நடந்த கத்திக்குத்து சம்பவத்தில் இரண்டு இளைஞர்கள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், மூன்றாவது சந்தேக நபரை பொலிஸ் அதிகாரிகள் தீவிரமாக தேடி வருகின்றனர்.

ஸ்கார்பாரோவில் உள்ள பிளஃபர் பூங்காவில் பலருக்கு கத்திக்குத்து தாக்குதல் நடந்துள்ளதாக கிடைத்த தகவலையடுத்து, டொரண்டோ பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

அங்கு சென்ற அதிகாரிகள், கத்திக் குத்துக் காயங்களுக்கு உள்ளான, இருவரும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு உயிருக்கு ஆபத்தில்லாத காயங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சந்தேகநபர்கள் இருவரையும் சம்பவ இடத்திலேயே புலனாய்வாளர்கள் கைது செய்தனர். இருப்பினும், மூன்றாவது சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களின் வயது மற்றும் பாலினம் குறித்த விவரங்கள் வெளியிடப்படவில்லை.

அத்துடன், தலைமறைவாக உள்ள சந்தேக நபரைப் பற்றிய எந்த விளக்கமும் தற்போது கிடைக்கவில்லை.

கத்திக்குத்துச் சம்பவம் நடந்த சூழ்நிலைகள் குறித்துப் பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். தகவல் தெரிந்தவர்கள் முன்வருமாறு வலியுறுத்தப்படுகிறது.




## வாகனத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

க்யூபெக் மாகாணக் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நால்வரும் சிறார்களே என்று அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

மேற்கு நோக்கிச் சென்ற காரை அதிவேக வீதியின் அருகே நிறுத்த முயன்றனர். ஆனால் அந்த எஸ்.யு.வி. நிறுத்தப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தப்பித்த அந்த வாகனம், பின்னர் றொறன்றோவின் மேற்கு பகுதியிலுள்ள செயின்ட் சார்ல்ஸ் புல்வூவர்டில் சிவப்பு விளக்கு பகுதியில் நின்றிருந்த மற்றொரு வாகனத்தில் மோதியுள்ளது. விபத்துக்குப் பிறகு, அந்த வாகனத்தில் இருந்த நபர்கள் தப்ப முயன்றனர்.

இதில், இரண்டு சந்தேகநபர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டனர். றொறன்ரோ நகர பொலிஸின் உதவியுடன், மற்ற இரண்டு சந்தேகநபர்களும் பின்னர் கைது செய்யப்பட்டனர்.

நால்வரும் சிறார்களாக இருந்ததால், அவர்களை விசாரித்து, எதிர்காலத்தில் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உறுதி பெற்று, பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து பொலிஸ் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகிறது.



# ஒன்ராறியோ அதிவேக வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலி

ஒன்ராறியோ அதிவேக வீதி 401 இல் இடம்பெற்ற இருவாகன விபத்தில், கேம்பிரிட்ஜ் நகரைச் சேர்ந்த 40 வயது பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவரது 6 வயது மகள் சிறு காயங் களுடன் மருத்துவமனையில் அனும திக்கப்பட்டுள்ளார்.

ஜேம்ஸ் ஸ்னோ பார்க்வே அருகே கிழக்கே செல்லும் எக்ஸ்பிரஸ் வழித்தடத்தில், அந்த பெண் சென்ற வாகனம் வழிநடத்தும் தடுப்புச் சுவரை மோதி பின்னர் கிழக்கே வந்த பிக்கப் டிரக் ஒன்றில் மோதியது.

விபத்து இடத்திலேயே அந்த பெண் உயிரிழந்துள்ளார் என அறிவிக்கப்பட்டது. அவரது 6 வயது மகளுக்கு இலகுவான காயங்கள் ஏற்பட்டுள்ளன என்று பொலிஸ் கூறியுள்ளது.

மற்ற வாகனத்தில் இருந்த நால்வருக்கும் எந்தவித காயமும் ஏற்படவில்லை. பின்னர், மேற்கே பயணித்துக் கொண்டிருந்த ஒரு டிரான்ஸ்போர்ட் டிரக்கை, விபத்தில் சிதைந்த பாகங்கள் மோதி தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. விபத்து தொடர்பான விசாரணை காரணமாக அதிவேக வீதியின் அந்த பகுதி பல மணி நேரங்களுக்கு மூடப்பட்டது.



# கனடாவில் கொலைக் குற்றவாளிக்கு நாடு தழுவிய பிடியாணை உத்தரவு

கனடாவில் கொலை சம்பவம் தொடர்பில் ஒருவருக்கு எதிராக நாடு தழுபிய பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வினிபெக் நகரில் கடந்த மே மாதம் இடம்பெற்ற கொலை வழக்கில் தொடர்புடைய ஒருவரை தேட பொலிஸார் தற்போது பொதுமக்களின் உதவியை கோரியுள்ளனர்.

2025 மே 23 ஆம் திகதி கம்பர்லாண்ட் அவென்யூவின் 300 ஆவது பிளாக்கில் காயமடைந்த நபர் ஒருவர் இருக்கின்றார் என கிடைத்த தகவல்களின் அடிப்படையில் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. அங்கு நிலத்தில் விழுந்த நிலையில் காயங்களுடன் ஒரு ஆண் கண்டுபிடிக்கப்பட்டார்.

அவர் கடுமையான காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

மேற்படி நபர், சாயிசி டீனே பழங்குடி கிராமத்தைச் சேர்ந்தவரான 39 வயதுடைய ரால்ஃப் மோயிஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் டாடூலே ஏரி பகுதியில் வசித்து வந்துள்ளார். இந்த கொலை தொடர்பாக 33 வயதுடைய பால் செய்வியர் பொன்னிக் என்ற நபரர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த கொலை குற்றச்சாட்டின் அடிப்படையில் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நபர் ஆபத்தானவராக கருதப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.